ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# ஒப்பியல் அணுகுமுறையில்
# இந்திய லோகாயத வாதமும் கிரேக்க எபிக்கூரனியமும்

*முனைவர் ஆ.பூமிச்செல்வம்,*
*இணைப் பேராசிரியர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அமெரிக்கன் கல்லூரி,*
*மதுரை – 02*

ஆய்வுச் சுருக்கம்

*கீழைத்தேயவர்களான நமக்கு தத்துவஞானம் என்பது பரம்பரைச் சொத்தே ஆகும் என்று உரிமை கொண்டாடுகின்ற குணம் நம்மில் பலருக்கும் உண்டு. ஆனால், இவ்வித உரிமை பாராட்டலின் உள்ளார்ந்த நிலைமையைக் கூர்ந்து அவதானிக்கும் இடத்து, அதனிலிருந்து திரள்வுபடுகின்ற உண்மையானது நாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக வேறொன்றாகவே இருக்கிறது. என்கிற நிலையில், சிந்திப்பது; அதிலும் புதிதாகச் சிந்திப்பது; அத்துடன் புதியன காணும் வேட்கையை மட்டுப்படாமல் பார்த்துக்கொள்வது என்கிற செயல்நிலைகள் நம்மவர்களைப் போன்றே மேற்கத்தியவர்களிடத்தும் இருந்திருக்கின்றன. இவ்விதத்தில் அடையாளம் காட்டப்பட வேண்டியவராக இந்திய அவைதீக தத்துவஞானியரான லோகாயதரைப் போன்றே, கிரேக்கச் சிந்தனையாளரான எபிக்கூரசும் விளங்குகிறார் என்பது கவனிக்கத்தக்கது. மனிதகுல வரலாற்றில் அறிவுத் திறப்புகளுக்கான வேட்கையானது காலகாலமும் தொடர்ந்து இருந்தே வருகிறது. இவ்வித வேட்கையுணர்வு உலகளவில் ஒரு குறிப்பிட்டத் தேசத்தாருக்கே மட்டுமின்றி பலதரப்பட்ட நாட்டவர்களிடமிருந்தும் கையளிக்கப்பட்டிருக்கிறது. இச்செயல்நிகழ்வில் வல்லாதிக்க தேசத்தார் வளர்ச்சியுறா நாட்டார் என்கிற பாகுபாடே இல்லை எனலாம். இவ்விதத்தில்தான் சூரியன் மறையா சாம்ராஜ்ஜியங்களை நிறுவிட முயன்ற ஐரோப்பியக் கூட்டமைப்பினரானாலும்; சரி அனைத்துவித ஒடுக்குதல் முறைமைக்கும் ஆட்பட்டிருந்த இந்தியத் துணைக் கண்டமானாலும் சரி. தம்மால் பொதுத் தளத்தில் போதிய பங்களிப்புகளைச் சரிசமமாக நல்கிய தரப்பினர்களாக இவர்கள் காணக் கிடைக்கின்றனர். இன்றளவில், அன்றாட மானுட வாழ்வுத் தளத்தில் பன்முகப்பட்ட அறிவார்ந்த உரையாடல்கள் விதவிதமாக உருவாக்கப்பட்டு, அவை பலவிதச் சிந்தனாவம்சங்களைக் கிளர்த்தத் தொடங்கியுள்ளன. இப்புதிய சிந்தனைகள் பலபோது தம்முள் ஒத்தும் சில போது மாறுபட்டும் வருவதென்பது கண்கூடாகிறது. இவ்விதச் செயல்நிகழ்வுகள் நடப்புக் காலகட்டத்தில் மட்டுமின்றி மானுடகுலம் சிந்திக்கத் தொடங்கிய காலந்தொட்டே இருந்து வந்திருக்கின்றன. என்கிறநிலையில், இவை குறித்தான மீளறிதல் என்பது அவசியமாகின்றது. பொதுவாக,'நவீனத்தின் வாயில்' என ஐரோப்பியக் கண்டமும், 'நாகரிகத்தின் தொட்டில்' என இந்தியத் துணைக் கண்டமும் பொதுவெளியில் அழைக்கப்படுவதுண்டு. இவ்விதப் பாவிப்புகள் இருவித முரண்பட்ட பாகுபாடுகளை உள்ளடக்கியக் காட்டுவன போலிருப்பினும், புத்துருப் பெறல் (Renaisence) என்கிற நிகழ்வில் ஒன்றுபடுகின்றன என்கிற முடிவுக்கு வரலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு உலகத்தாரின் தத்துவம்சார் உரையாடல்களை அவதானித்து அறியமுற்படுமிடத்து கி.மு. 3ஆம் நூற்றாண்டு காலவாக்கில் உதித்தெழுந்த இந்திய உலகாயதமும் ஐரோப்பிய எபிக்கூரனியமும் பலவிடத்து ஒரே தடத்தில் பயணிப்பனவாகக் காணக்கிடைக்கின்றன. அவ்விதப் போக்குகளை ஆய்ந்து நிரல்படுத்தித் தருவதாக இவ்வாய்வின் பொருண்மை அமையலாகிறது.*

*குறிச் சொற்கள் (Keywords)*

*அறிவுத் திறப்பு, வேட்கை, கையளிப்பு, கிளர்வு, பாவிப்பு, புத்துரு, சேதனம், அசேதனம், காத்திரம், வகிபாகம்*

*முன்னுரை*

*நாம் வாழும் உலகியலின் உண்மை நிலவரங்களை உணர்ந்தறிய நம்மவர் மிகுதியும் பயன்படுத்துவது தத்துவ அறிவைத்தான். ஆனால், பொதுவாக உலகளாவிய அளவில் விமரிசகர்களால் பெரிதும் புறக்கணிக்கப்பட்ட துறையும் இத்தத்துவம்தான். மானுடத்தின் வாழ்நிலையைப் புரிந்துகொள்ள முயலுகிற, புரிய வைக்கிற முயற்சியின் ஒரு பகுதியாக விளங்கும் துறையாக இத்தத்துவத் தேடலானது அமைகிற நிலையில், இவ்விதத் தேடலின் நிலைகள் என்பன பலபோது, பலவித முகாம்களாக பாகுபட்டே நிற்பதைக் காணலாம்.*

*பொதுவாக, இந்த உலகில் நிலவுகிற இயற்கை, இயக்கம் பெறுகிற சமூகம், கிளர்ந்தெழுகிற சிந்தனை என்பன போன்றனவற்றின் மிகப் பொதுவான வளர்ச்சி விதிகளைப் பற்றிய விஞ்ஞானத்தையே தத்துவஞானமென்றும், இவ்வித விஞ்ஞானங்கள் குறித்த விஞ்ஞானத்தையே தத்துவம் என்றும் மெய்யியலாளர்கள் அழைப்பர்.*

*குறிப்பாக, இப்பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம், அதற்கான காரண நியமங்கள் குறித்தான அடுக்கடுக்கான வினாக்களுக்கு விடை பகர முயலுகிற துறையையே தத்துவவியல் என்று அழைக்கின்றனர். இத்தத்துவ இயலை மையங்கொண்டு கருத்து முதல், பொருள் முதல் என்கிற இருபெரும் முகாம்கள் கிளைபிரிந்து, இவ்விரண்டும் காலாகாலமும் தத்தமக்குள் சர்ச்சித்துக் கொண்டே வருதல் என்பது கண்கூடு. எனினும், இவ்விரண்டின் உராய்வுகளானவை இவ்வுலகத்தின் உண்மைப் பொருள் அல்லது இறுதியுண்மை எதுவாக இருக்கக் கூடும் என்பது குறித்த தேடல்களாகவே பெரும்பாலும் அமைந்து விடுகிறது. இந்நிலையில், தமது வாழ்வுப் பாதையில் எதிர்கொள்ள நேருகிற இன்ப - துன்பங்கள், சிக்கல் - சிடுக்குகளால் அவதியுறும் மானுடம், தமது வாழ்வுக்கான அர்த்தம்தான் என்ன என்கிற அடிப்படை வினாவினைத் தமக்குள் எழுப்பிக் கொள்வதாகிறது. இவ்விதமாக எழுப்பப்படுகிற வினாவே இறுதியில் மெய்ப்பொருளைத் தேடுவதற்கும் வித்திடுகிறது.இத்தகைய மெய்ப்பொருள் தேடுதல் குறித்தான ஒத்த சிந்தனைப் பள்ளிகளைச் சேர்ந்தனவாகக் காட்சிப்படுபவைதான் இந்திய லோகாயதவாதமும், கிரேக்க எபிக்கூரனியமும்.*

*ஆய்வு அணுகுமுறை*

*இக்கட்டுரையில் கருத்துக்களை விளக்கியுரைப்பதால் விளக்கமுறைத் திறனாய்வும் இரண்டு கோட்பாடுகளை ஒப்பிடுவதால் ஒப்பீட்டு முறைத் திறனாய்வும், இருவேறு சிந்தனை முறைகள் குறித்துத் தத்துவார்த்த நோக்கில் ஆய்வதால் தத்துவார்த்த அணுகுமுறையும் கையாளப்பட்டுள்ளன.*

*தத்துவம் என்னும் கருத்துருவின் தோற்றப்பின்புலம்*

*ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் கிரீஸ், இந்தியா, சீனா, எகிப்து ஆகிய தேசங்களில், ஒரேசமகாலகட்டத்திலோ அல்லது சற்று முன்பின்னாகவோ, உலகினை அறிவதற்கான எத்தனங்கள் முகிழ்த்திருக்கின்றன. இவ்வித எத்தனங்களுக்குக் காலப் போக்கில் மெய்யியல் அல்லது தத்துவம் எனப் பெயரும் இடப்பட்டிருக்கின்றது.*

*“இயற்கையைக் கண்டு மிரண்ட மனிதன், முதலில் இரண்டு காரியங்களில் இறங்கியிருக்கிறான். ஒன்று; அதைப் பார்த்து இறைஞ்சுவது. மற்றொன்று அதைப் புரிந்து கொள்ள முயல்வது. இவ்வித இறைஞ்சுதலிலிருந்தே இறையியல் பிறந்திருக்கிறது. புரிந்துகொள்ள முயன்றதிலிருந்து தத்துவம் பிறந்திருக்கிறது” என்பர் (அருணன், 2007). இவ்விதமாக முகிழ்த்த இவை கருத்து முதல், பொருள்முதல் என இரண்டு முகாம்களாகப் பாகுபட்டு அமைந்தன.*

*இந்திய லோகாயதவாதம் – விளக்கம்*

*இந்தியாவில் தோன்றிய ஒருவித மெய்யியல் கோட்பாடே லோகாயதம் ஆகும். லோகாயதம் என்பதற்கு ”மக்களிடையே உள்ளது; இந்த உலகம் பற்றியது” (தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, 2010) என்கிற இருவேறு அர்த்தங்கள் தரப்படுகின்றன. “இது உலகைநோக்கி*

பொருள்முதல்வாத அனுபவ அணுகுமுறையை முன்னிறுத்தும் திறத்தது. கடவுள், மாயை, பிறவிச் சுழற்சி, ஆன்மா போன்ற சமய நம்பிக்கைகளையும் மீவியற்கை விளக்கங்களையும் இது மறுக்கிறது. இவ்வுலகாயதம் இவ்வுலக வாழ்வில் நம்பிக்கையையும் உலக உடன்பாட்டுச் சிந்தனையையும் கொண்டது. இந்தச் சிந்தனை வீடுபேறு என்பதை மறுத்து, இன்பமாக வாழ்தலை முதன்மைப்படுத்துகிறது.

இந்திய மெய்யியலில் பொருள்முதல்வாத, இயற்கை விளக்க நோக்குடைய சிந்தனையாக லோகாயதம் விளங்கியதால், இது நாத்திகவாதம் எனப்பட்டது. இத்துடன், இந்தியக் கருத்துமுதல்வாதத்தின் மைய மெய்யியலான வேதங்களுக்கும் சடங்குகளுக்கும் எதிர்ப்பையும் முன்வைப்பதாயிற்று".(ta.m.wikipedia.org)"பிரத்தியட்சத்தை மட்டுமே அளவையாகக் கொண்ட உலகாயதருக்கு உயிரும் இறைவனும் பொய்; உலகும் உடலுமே மெய்... இவ்உலகாயதருக்குச் சடமே மூலப்பொருள். சித்து என்பது அந்தச் சடத்தைத் தனக்கு நிலைகளனாகவுடைய பொருள்" (கி.லட்சுமணன், 2019) என்கின்றனர்.

இந்தியத் தத்துவ இயலில் லோகாயதமானது நாத்திகவாதமாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. இதேபோன்ற வகைப்படுத்தல்தான் புத்த, சமண மதங்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இது பருப்பொருள் சார்ந்ததாகவும் இறை மறுப்புவாதப் பண்புகள் கொண்டதாகவுமே பெரிதும் அறியப்படுகிறது.

### லோகாயதவாதத்தின் அடிப்படைக் கூறுகள்

இந்திய மெய்யியல் மரபில் அவைதீகத் தத்தவமாகப் பாவிக்கப்பட்ட லோகாயதவாதமானது கருத்துமுதல்வாதச் சிந்தனைகளுக்கு நேர் எதிரான கருத்தாம்சங்களையே தனது அடிப்படைக் கூறுகளாக உள்வாங்கியிருக்கிறது. குறிப்பாக, கடவுள் மறுப்பு, பருப்பொருள் சார்பு, இயற்கையோடு இயைந்து பயணப்படுதல் ஆகியவற்றைத் தமது மையச் சரடுகளாக இது கொண்டிருக்கிறது. இவை மட்டுமின்றி மனிதன் மரணத்தை எய்திய பின் அவன் மீண்டும் பிறப்பதில்லை என்றும் உலகில் தோன்றிடும் பொருட்கள் கடவுளால் உருவாக்கப்பட்டவையல்ல அவை இயற்கையிலிருந்தே இயல்பாக எழுகின்றன என்றும், மதம் என்பது மனிதனின் சுயநலக் கண்டு பிடிப்பு மட்டுமே என்றும் இது அப்பட்டமாகக் கருத்துரைப்பதாக காணக்கிடைக்கின்றது.

### கிரேக்க எபிக்கூரனியம் – தொடக்கம்

ஏசுநாதரைக் காட்டிலும் சுமார் மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்பே பிறந்தவரான எபிகூரஸ், கிரேக்க தேசத்தின் ஏதென்ஸ் நாட்டுக்காரர். கிரேக்கத்தின் புகழ்வாய்ந்த சிந்தனையாளரான பிளேட்டோ மறைந்து ஐந்தாண்டுகள் ஆன பிறகே எபிகூரஸின் பிறப்பு நிகழ்ந்திருக்கிறது. இவரின் தாய் மாயாஜாலமும் மந்திரமும் செய்து பணம் ஈட்டி வந்த நிலையில், மக்களிடையே காணப்பட்ட மூடத் தனத்தின் மீது இவருக்கு ஒருவிதத் துவேஷம் எழுந்திருக்கிறது. "தன் அன்னையின் மாய மந்திரங்கள் எல்லாம் வெறும் வெளிவேசம்; அது பிழைத்திட ஒரு வழி மட்டுமே. அந்தப் பிழைப்பிற்கு ஊராரின் மூட நம்பிக்கைகளே மூலதனம் என்பதை அறிந்தார் எபிகூரஸ். மனிதச் சமூகத்தில் எந்தவிதமான ஆதாரமுமில்லாமல் வெறும் ஊகங்களாகவே நிலவுகிற மூடநம்பிக்கைகளின் மீதுதான் முதலில் அவருக்குக் கோபம்"(மலர்மன்னன், 2004) இந்நிலையில்தான், இந்தப் பூமியும் இதரக் கோளங்களும் ஒன்றுமில்லாத பாழிலிருந்தே தோன்றியதாக இவருக்குக் கற்பிக்கப்பட்ட போது "அப்படியானால் ஒன்றுமில்லாத அந்தப் பாழ் எதிலிருந்து தோன்றியது என்று திரும்பிக் கேட்கத் தொடங்கினார். அதற்கு விடை கிடைக்கவில்லை"(எபிக்கூரஸ், 2004). ஆகவே, விடையைத் தானே தேடிப் புறப்பட்டார். விளைவு எபிக்கூரனியம் தொடக்கம் பெற்றது.

### எபிக்கூரஸின் அடிப்படைச் சிந்தனைகள்

ஒரு தத்துவவாதியானவர் எதை ஆராய்கிறாரோ, அதைத் தனக்குப் புறத்தில் வைத்து மட்டுமே ஆராய்வார் எனப் பொதுவாகக் கூறப்படுவதுண்டு. "ஒரு தத்துவவாதி, தான் தேர்ந்து கொள்ளுகிற ஆய்வுப் பொருளின் மீது சொந்தப் பிரியம் எதையும் காட்டுவதேயில்லை. அவரது பிரியம் எல்லாம் உண்மையைக் காண்பதில்தான். அதனால், அவருடைய கருத்து புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப மாறக் கூடியது. பொதுவிமர்சனத்திற்கும் உட்பட்டது. இத்துடன்

வெளிப்படையானது; பிறருக்குத் தெரிவிக்கக் கூடியது. இந்தவகையில் ஒரு விஞ்ஞானியோடு இவருக்குக் கூட்டுறவு உண்டு" (அருணன், 2007) என்பர். இவற்றுக்கு ஏற்ற வகையிலேயே எபிக்கூரஸின் தேடல்களும் அமைந்துள்ளன.

எபிக்கூரஸின் அடிப்படைச் சிந்தனைகளுள் முக்கிய இடத்தையும் முதன்மை ஸ்தானத்தையும் வகிப்பது யாதெனின், இந்த உலகத்தின் எல்லா உயிர்களும் இன்பமாக வாழ வேண்டும் என்பதேயாம். ஆனால் உடலுக்கோ ஆன்மாவுக்கோ துன்பத்தை விளைவிக்கக் கூடிய இன்பம் எதனையும், அவர் இன்பம் என ஒத்துக் கொள்ளவேயில்லை எனலாம்.

"எபிக்கூரஸ், கேளிக்கைகளில் மூழ்கிக் கிடப்பதை இன்ப வாழ்க்கைக்கு அடையாளம் அல்ல என்று வலியுறுத்தினார். வாழ்க்கையை அனுபவிப்பதுதான் பிறவியின் நோக்கம் என்று கூறிய அதேநேரத்தில் வாழ்க்கை என்பது என்ன என்றும் விளக்கமளித்தார். பயமில்லாததுதான் வாழ்க்கை, சிக்கல்களோ, சங்கடங்களோ இல்லாததுதான் வாழ்க்கை. நமக்கு அமையும் வாழ்க்கையில் இன்னல்கள் தோன்றுவதற்கு நாம்தான் பொறுப்பாளிகள். நமது நடவடிக்கைகளைப் பொருத்தே நமக்கு வாழ்வில் இன்பம் வாய்க்கும். ஒன்றுமில்லாத பாழிலிருந்து ஒன்றுமே தோன்றுவதில்லை. அதேபோல ஒன்றுமில்லாத பாழில் ஒன்றும் மறைந்து போகவும் முடியாது என்றார்.

இவ்வுலகில் உள்ள உருவங்கள், அருவங்கள் அனைத்துமே அணுக்களின் திரட்சியாகும். ஓரின அணுக்கள் ஒன்று திரள்கையில், அவை ஒரு குறிப்பிட்ட உருவமாக அல்லது அருவமாக மாற்றமடையும். வரமளிப்பதோ, சாபமிடுவதோ கடவுளர்களின் வேலையல்ல. கடவுளர்கள் மனிதர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் மகத்தான சக்திகளோடும் உன்னதமான விசயங்களோடும் தொடர்புள்ள அவர்கள், சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில், எந்தவிதமான அக்கறையும் காட்டமாட்டார்கள். மனிதர்கள் கடவுள்களை வழிபடக் காரணம் யாதெனின், அதன் பயனாய் மனிதர்கள் மனிதத்துவத்தை அடைய முடியும் என்பதுதான். தெய்வீகத்தோடு தொடர்பு கொள்ளும் மனிதன் தெய்வமாக ஆகாவிட்டாலும், குறைந்தபட்சம் மனிதனாகவாவது இருக்கலாம் அல்லவா! ஆகவே, வேண்டுதலோ பயமோ இல்லாத தெய்வ வழிபாடு மட்டுமே மனிதனை மனிதனாக வாழ வழி செய்யும் என்றார்.

சாவைக் குறித்து மனிதன் அஞ்சத் தேவையேயில்லை. ஏனெனில் சாவை மனிதனால் தவிர்க்கவே முடியாது. ஆனால், சாவு பற்றிய பயத்தை மனிதனால் நிச்சயம் தவிர்த்துக் கொள்ள முடியும். மரணத்திற்குப் பின் நாம் உணர்ச்சியற்ற சடமாகி விடுவோம். துன்பம், வலி போன்ற தொல்லை தரக் கூடிய பிரச்சினைகள் எவையுமே நாம் இறந்த பின்னர், நம்மை அண்டாது. உடல் சாய்ந்ததுமே ஆன்மாவும் பல்வேறு அணுக்களாய் சிதறுண்டு போய்விடும். ஆகவே, மரணத்திற்குப் பின் நரகமோ, சுவர்க்கமோ நமக்காகக் காத்திருக்குமென்று நாம் எதிர்பார்த்திருக்கத் தேவையே இல்லை" (மலர்மன்னன், 2004) என்றார்.

"இயற்கையை ஆராயும் போது, மனித இனத்திற்குப் பயன்படத்தக்க வகையில் எதையும் மனந்திறந்து பேசவே நான் விரும்புகிறேன். என்னை ஒருவராலும் புரிந்து கொள்ள இயலாது போனாலும் பரவாயில்லை; பாமர மக்கள் என்னைப் புகழ வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குச் சரியென்றுபடும், சாதாரணமான அபிப்ராயங்களையெல்லாம் நான் வெளியிட விரும்பவில்லை என்றும் சுட்டியுள்ளார்.

நாம் பிறக்கும் பொழுது அருந்திய பால், நமக்குச் சாவையே தருகிறது என்பதை உணராமல்,சிலர் தங்களின் வாழ்க்கை முழுவதையும், தாங்கள் வாழ்வதற்கான உபகரணங்களைத் தேடி சேகரித்துக் கொள்வதிலேயே செலவழித்து விடுகிறார்கள் என்றும் விமர்சித்து உள்ளார்.

இயற்கையைப் பற்றிய ஆராய்ச்சி மனிதனுக்குத் தற்புகழ்ச்சியை உண்டாக்காது. பலருடன் தர்க்கிக்கும் அல்லது போட்டியிடும் கல்விச் செருக்கையும் அது தோற்றுவிக்காது. உயர்ந்த உளப் பாங்கினையும் மனநிறைவையுமே அது நல்கும் என்றும்" (மலர்மன்னன், 2004) மேற்கண்ட விதங்களில், எபிக்கூரஸின் சிந்தனைகளின் சாரங்கள் அமையப் பெறுகின்றன. இவர்தம் வாழ்நாளில் முன்னூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியதாகக் கூறப்பட்டிருப்பினும், காலவோட்டத்தில் அவை அழிந்துபட இவைபோன்று ஒரு நூறு கருத்துத் தெறிப்புகள் மட்டுமே தற்போது கையகப்பட்டிருக்கின்றன.

லோகாயதம் – எபிக்கூரனியம் ; ஒத்திசைவுகளும் வேறுபாட்டு அம்சங்களும்

'ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுதல் என்பது மானுட உலகில் வெகு இயல்பாக எழுந்து பரவுகிற ஓர் உணர்வு நிலையாகிறது. இதற்கான முதல் கோட்பாட்டு முயற்சியும் கூட ஐரோப்பிய மண்ணில்தான் தொடங்கியிருக்கிறது. ஒப்பியல் முயற்சி பல்வேறு துறைகளுக்கு இடையே கடைப்பிடிக்கப்பட்டாலும் கூட, இருவேறு தத்துவப் பள்ளிகளுக்கு இடையே அதனைச் செலுத்திப் பார்க்கும்போது, அதன் வீச்சு வியக்கத்தக்க விளைவுகளை நல்குவதாக அமைகிறது.

குறிப்பாக,ஃபிலேஷோபியா என்கிற வேர்ச்சொல்லை உலகிற்கு ஈந்து, உலகத் தத்துவத் தோற்றத்திற்கான தாய் வீடாக விளங்குகிற கிரேக்க தேசத்தைச் சேர்ந்தவராக எபிக்கூரஸ் இருப்பதும், தரிசனம், சமயம், தத்துவ தரிசி, மெய்ப்பொருள் முதலான சொற்களை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தந்துள்ள இந்திய தேசத்தில், உதித்தவராக லோகாயதவாதியர் இருப்பதும் கூட, தோற்றக் காலத்தால் ஒத்திசைபவர்களாக இருக்கின்றனர் என்பது கவனத்திற்குரியது.

மேற்சுட்டிய கருத்துநிலையோடு, இயற்கையோடு இணைந்து பயணப்படுதல், பருப்பொருள் சார்பு, மூட நம்பிக்கைகளுக்கான எதிர்ப்பு, மனிதனின் மரணத்திற்குப் பின்பான நிலைமைகள், துயர விடுதலை என்பன கடவுளிடமிருந்து கிடைக்காது, உலகில் காணப்படும் பொருட்கள் யாவும் அணுத்திரட்சியால் உருவானவையே ஆகும்;இவற்றை யாரும் உருவாக்கவில்லை என்பன போன்ற கருத்துநிலைகள் யாவையும் இவ்விரு தரப்பாரைப் பொருத்தவரை மிகவும் ஒத்துப் போவனவாக இருக்கின்றன. இவ்விதக் கருத்தாம்சங்களை இவ்விரு தரப்பாரும் ஒரே இடத்திலிருந்து விவாதித்து, பின் வெளியிட்டிருப்பமை போன்றே காணப்படுவதில்தான் இதன் சிறப்பே அடங்கியிருக்கிறது.

ஆனால், வைதீக எதிர்ப்புச் சிந்தனையாகவே கிளர்ந்தெழுந்த லோகாயதவாதமானது, கடவுள் சார்ந்த கருத்து நிலைகளை மிக மூர்க்கமாக மறுக்கின்ற நிலையில், தெய்வீகம் சார்ந்த ஒருவித உணர்வாம்சத்தை சற்றே மெல்லியக் குரலில் எபிக்கூரஸ் சொல்லிச் செல்வதன் வழி, ஒத்திசைவு நிலையிலிருந்து சற்று வேறுபடுபவர் ஆகிறார்.

ஆய்வுப் பயன்கள்

மானுட வாழ்வோட்டத்தில் தாம் யார்? தமது பிறப்பின் காரணம் யாது? என்பவற்றை அறிந்து கொள்வதற்கான எத்தனிப்புகளும் தமது இருத்தலின் அர்த்தங்களைக் கண்டடைவதற்கான தேடுதல்களும் என்றென்றுமாக தொடர் இயக்க நிலைபெற்றே வந்துகொண்டிருக்கின்றன. இவ்வியக்க நிலையில், சிலர் தமக்கானத் தேடலை மட்டும் தேர்வர். வேறு சிலரோ தம்மோடு பயணப்பட்டு வருகின்ற சேதன – அசேதன பொருட்கள் அனைத்திற்குமாகவும் சேர்த்தே தம் ஆய்வை மேற்கொள்வர். இவ்விதத்தில் பார்க்கும்போது, இந்திய லோகாயதவாதியர் ஆனாலும் சரி; ஐரோப்பிய எபிக்கூரஸ் ஆனாலும் சரி; சகல உயிர்களையும், உலகினையும் புரிந்து கொள்வது, வழிநடத்துவது என்கிற செயல்நிலைகளில் ஒன்றிணைந்தே பயணப்பட்டிருக்கின்றனர் என்பது தெரிய வருகிறது.

குறிப்பாக, இயற்கையுலகு மீதான நேயம், விஞ்ஞானக் கண்கொண்டு இவ்வுலகை அணுகிடும் பாங்கு, மூடநம்பிக்கைகள் மீதான எதிர்வுகள்,மரணத்திற்குப் பின்பான உயிர்களின் நிலை முதலான கருத்து நிலைகளின் நிதர்சனங்களை இந்திய லோகாயதவாதிகளும் ஐரோப்பிய சிந்தனைவாதியான எபிக்கூரஸூம் மிக இயல்பான மொழி ஆளுகையில், எளியோர்க்கும் புரியும் கருத்தாக்கங்களாக மாற்றித் தந்துள்ளமையை இவ்வாய்வு கண்டு சொல்ல முயன்றுள்ள வகையில் தனித்துவம் பெறுவதாக அமைகிறது. இத்துடன், இவ்வுலகைப் புத்தாக்கம் செய்வதில் இவ்விரு தரப்பாரின் வகிபாகம் மிகவும் காத்திரத் தன்மை கொண்டது என்பதும் தெரிய வருகிறது.

முடிவுரை

மானுடர்களாகிய நாமும் நம்மோடு ஒத்த உயிர்களும், உயிரற்ற பிறவும் நிறைந்திருக்கின்ற இவ்வுலகை மறுபரிசீலனை செய்வது, மாற்றுவது என்பன தத்துவாதிகளின் வேலை எனின், இவ்வுலக வாழ்வின் இருப்புக் குறித்த சரியான புரிதலை ஏற்படுத்துவதும் கூட அச்சிந்தனாவாதியரின் கடமையாகிறது.

மானுடப் புலனுறுப்புகளுக்குப் புலப்பட்ட மூலப் பொருட்களின் தோற்றம் பற்றி முதலில் சிந்திக்கத் தொடங்கி, புலன்களுக்கு அகப்படாத பொருட்கள் வரையிலுமாக அதனை

*நீட்டித்த சிந்தனாவாதிகள் யாவரும் கருத்து, பொருள் என்கிற இருவேறு முகாம்களைச் சேர்ந்தவர்களாக அமைந்ததும். அப்பிரிவு நடப்புக் காலகட்டம் வரையிலும் கூட மறையாது தொடர்ந்து வருவதும் ஆச்சரியத்துக்குரியதாகவே படுகிறது.*

*கருத்துமுதல்வாதத் தத்துவவாதிகள் தங்களின் எவ்வித வியாக்கியானங்களுக்கும் கடவுள் என்கிற இல்பொருளைத் துணைக்கு அழைத்திடும் நிலையில், லோகாயத மற்றும் எபிக்கூரனியவாதிகள் அக்கடவுளரை மறுத்து,அறிவியல் கண்ணோட்டத்துடன் அனைத்துவிதச் செயல் நிகழ்வுகளையும் அணுகுகிற விதத்தில் மிக அணுக்கத்திற்குரியவர்களாக ஆகிப் போகின்றனர். இவற்றை மையமிட்டுப் பார்க்கும்போது, இவ்வுலக இயங்கியலை வெறுமனே வியாக்கியானம் மட்டுமே செய்வதிலிருந்து விடுபட்டு, அதன்போக்கை மாற்றி அமைத்திட முயன்றுள்ளவர்களாக லோகாயதர் மற்றும் எபிக்கூரனியர் விளங்குகின்றனர் என்பது வாசிப்பு வழியில் புலப்படலாகும் கருத்து நிலையாகிறது.*

*துணைநூற் பட்டியல்*


1. *அருணன், (2007), தத்துவஞானம், பாரதி புத்தகாலயம், சென்னை -18*
2. *தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா, 2010, எஸ்.தோதாத்திரி (மொ.ஆ), உலகாயதம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை -98*
3. *மலர்மன்னன், 2002, சிந்தனையாளர் எபிக்கூரஸ், பிரேமா பிரசுரம், சென்னை-24*
4. *லக்ஷ்மணன்,கி., 2019, இந்தியத் தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14*
5. *ta.m.wikipedia.org*


********* ********* ********** ********* ********* ********** ********** **********